# INSURANCE FOR ALL:
# FOR A SECURE FUTURE



## பாதுகாப்பான எதிர்காலத்திற்காக

## அனைவருக்கும் காப்புறுதி

**INSURANCE AWARENESS WORKSHOP**

Organized by

Insurance Regulatory Commission of Sri Lanka

(IRCSL)

Powered by IASL

# What is the most valuable gift you all received today ?

இன்று உங்களுக்கு கிடைத்த மிகப் பெறுமதியான பரிசு என்ன?



# உங்கள் குடும்பத்தின் எதிர்காலம் பாதுகாப்பானதா?
# ஒரு நிமிடம் யோசியுங்கள்...

உங்களுக்கு எதிர்பாராதது ஏதேனும் நேர்ந்தால், உங்கள் அன்புக்குரியவர்கள் தங்கள் வாழ்க்கை முறையைத் தங்குதடையின்றி தொடரவும், கனவுகளை அடையவும் தேவையான நிதிப் பாதுகாப்பு உள்ளதா?



## காப்புறுதி என்பது மரணம் பற்றியது மட்டும் அல்ல.

அது உங்கள் குடும்பத்தின் கௌரவம், கனவுகள் மற்றும் பாதுகாப்பு பற்றியது.

# காப்புறுதி என்றால் என்ன ?
# What is insurance?

## காப்புறுதி என்பது:

எதிர்பாராத நிதி இழப்புகளில் இருந்து உங்களை பாதுகாக்கும் ஒரு **செயல்பாடு, வாக்குறுதி, அனுகூலம்.**

### எதிர்பாராத நிகழ்வுகள்:

- வீடு தீப்பற்றுதல்
- வாகன விபத்து
- குடும்ப அங்கத்தவர்களுக்கு ஏற்படும் திடீர் மரணம், நோய்

### நிதி யதார்த்தம்:

"இவ்வாறான சந்தர்ப்பங்களில் அதிக பணம் தேவைப்படும். ஆனால், எல்லோராலும் இத்தகைய செலவுகளைச் செய்ய போதிய பணம் இருக்காது."

**சவாலான சந்தர்ப்பங்களில்தான்,**

**காப்புறுதியின் உண்மையான மதிப்பு வெளிப்படுகிறது.**

# காப்புறுதி என்றால் என்ன ?
# What is insurance?

**காப்புறுதி என்பது: செயல்பாடு, வாக்குறுதி, அனுகூலம்**

## செயல்பாடு

உங்கள் தொடர்ச்சியான சிறு கட்டணத்திற்கு ஈடாக, காப்புறுதி நிறுவனம் நிதிப் பாதுகாப்புக்கு உறுதியளிக்கிறது.

## வாக்குறுதி

இது பாதுகாப்பின் வாக்குறுதி. மன அமைதி தரும் ஒரு நிதிக் கருவி.

## அனுகூலம்

எதிர்பாராதது நடந்தாலும், உங்கள் குடும்பத்தின் வழமையான வாழ்க்கை தொடர வேண்டும்.

# எளிய உதாரணம்

**தலைக்கவசம் உயிரைக் காக்கும்.**

அது விபத்து நடக்கும்போது தேவைப்படும் ஒரு பாதுகாப்பு.

**உயிர் காக்கும் கவசம் (Life Jacket) உயிரைக் காக்கும்.**

அது ஆபத்து ஏற்படும்போது மட்டுமே தேவைப்படும் ஒரு பாதுகாப்பு.

**அதுபோல, மருத்துவக் காப்புறுதி உங்கள் சேமிப்பைக் பாதுகாக்கும்.**

இது நோய்வாய்ப்படும் போது தேவைப்படும் நிதிப் பாதுகாப்பு.

பாதுகாப்பின் உண்மையான மதிப்பு,

அதை முன்கூட்டியே வைத்திருப்பதில் தான் உள்ளது.

**காப்புறுதியும் அவ்வாறானதொன்று**

# காப்புறுதி பற்றி நாம் ஏன் சிந்திக்க வேண்டும்?

# Why should we care about insurance?

**ஏனெனில், வாழ்க்கை நிச்சயமற்றது**

**காப்புறுதி இல்லாதபோது ஏற்படும், ஒரே ஒரு எதிர்பாராத நிகழ்வு,**

உங்கள் சேமிப்பு, முதலீடு, கனவுகள் அனைத்தையும் சிதைத்துவிடும்.

**காப்புறுதி** என்பதே அதற்கான தீர்வு.

உங்கள் நிதி ஆபத்தை மாற்றுங்கள்.

பாதுகாப்பு, மன சுதந்திரம் மற்றும் முழுமையான மன அமைதியை பெறுங்கள்

# பல்வேறு வகையான காப்புறுதிகள்
## Different types of insurance

**ஒவ்வொன்றும் வாழ்க்கையின் வெவ்வேறு அம்சத்தைப் பாதுகாக்கிறது.**

---

### ஆயுள் காப்புறுதி

நீங்கள் இல்லாத நாளில், உங்கள் குடும்பத்திற்கு நிதிப் பாதுகாப்பு.

✓ கடன் மற்றும் அன்றாட செலவுகள்
✓ குழந்தைகளின் கல்வி
✓ வழமையான வாழ்க்கை**யை** தொடர உதவுதல்

### மருத்துவக் காப்புறுதி

உங்கள் சேமிப்பைத் தொடாமல், சிறந்த மருத்துவ சிகிச்சை.

✓ மருத்துவமனை பில்கள் மற்றும் அறுவை சிகிச்சைகள்
✓ மருந்துகள் மற்றும் மருத்துவர் சந்திப்புகள்
✓ உயர்ந்த மருத்துவ செலவுகளிலிருந்து பாதுகாப்பு

### வாகன காப்புறுதி

விபத்துகளின் போது உங்களையும் மற்றவர்களையும் பாதுகாத்தல்.

✓ உங்கள் வாகனத்திற்கான சேதத்திற்கு இழப்பீடு
✓ பிறருக்கு ஏற்படும் சேதத்திற்கு பொறுப்பு
✓ பல நாடுகளில் சட்டரீதியாக கட்டாயம்

# பல்வேறு வகையான காப்புறுதிகள்

## Different types of insurance

**ஒவ்வொன்றும் வாழ்க்கையின் வெவ்வேறு அம்சத்தைப் பாதுகாக்கிறது.**

### வீட்டு காப்புறுதி

- ✓ தீ திருட்டு வெள்ளம் போன்ற அனைத்து அபாயங்களிலிருந்தும் பாதுகாப்பு
- ✓ உங்கள் மிகப்பெரிய முதலீட்டை பாதுகாப்பாக வைத்திருங்கள்
- ✓ முழுமையான சொத்து பாதுகாப்பு

### பயணக் காப்புறுதி

- ✓ மருத்துவ அவசர நிலைகளில் உடனடி உதவி
- ✓ இழந்த பயணப்பைகளுக்கான இழப்பீடு
- ✓ சுற்றுலா ரத்துக்கான பாதுகாப்பு
- ✓ உள்நாட்டு & வெளிநாட்டு பயணங்களுக்கு மனநிம்மதி

### உயர் கல்விக்கான காப்புறுதி

- ✓ எதிர்காலக் கல்விக்கான திட்டமிட்ட சேமிப்பு
- ✓ பெற்றோருக்கு ஏதேனும் நேர்ந்தாலும் உத்தரவாதமான நிதி
- ✓ பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை முழுமையான பாதுகாப்பு

# பல்வேறு வகையான காப்புறுதிகள்

# Different types of insurance

**ஒவ்வொன்றும் வாழ்க்கையின் வெவ்வேறு அம்சத்தைப் பாதுகாக்கிறது.**

### தனிநபர் விபத்து காப்புறு

- ✓ காயம், ஊனம் அல்லது விபத்து மரணத்திற்கு உடனடி நிதி உதவி
- ✓ கடுமையான விபத்திற்குப் பிறகு உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் பொருளாதார பாதுகாப்பு
- ✓ எதிர்பாராத மருத்துவ செலவுகளை ஈடுசெய்தல்

### வியாபாரக் காப்புறுதி

- ✓ தீ விபத்து மற்றும் திருட்டு இழப்புகளுக்கு இழப்பீடு
- ✓ சட்டப்பூர்வ பொறுப்புகளுக்கான பாதுகாப்பு
- ✓ ஊழியர் செயல்பாடுகளால் ஏற்படும் இழப்புகள்
- ✓ எதிர்பாராத வணிக இடர்பாடுகளில் இருந்து முழுமையான பாதுகாப்பு

### விவசாயக் காப்புபுறுதி

- ✓ காலநிலை மாற்றங்களால் ஏற்படும் பயிர் இழப்புகள்
- ✓ இயற்கை பேரிடர்களில் இருந்து விவசாயிகளுக்கு பாதுகாப்பு
- ✓ விவசாய வருமானத்தை நிலைப்படுத்துதல்

# ஆயுள் காப்புறுதியை எளிமையாக விளங்கிக்கொள்ளுதல்

## Understanding Life Insurance

### 1️⃣ ஒரு எளிய ஒப்பந்தம்

சிறு கட்டணம் செலுத்துங்கள் → பெரும் பாதுகாப்பைப் பெறுங்கள்.

### 2️⃣ உங்கள் குடும்பத்திற்கு நிதி உறுதி

நீங்கள் இல்லாத நாளில், அவர்களின் வாழ்க்கை தடையின்றி தொடர.

### 3️⃣ இன்று: பாதுகாப்பு + சேமிப்பு + முதலீடு

வாழும்போதும், இறந்த பின்னும் நன்மைகள்.

# முதல் அடி எடுத்து வையுங்கள்
## Taking the first step

- உங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் உரையாடலை தொடங்கவும்
- நம்பகமான, உரிமம் பெற்ற காப்புறுதி ஆலோசகருடன் தொடர்பு கொள்ளவும்
- உங்கள் குடும்பம் வருமானம் எதிர்கால இலக்கு தேவைகளை பற்றி அறியவும்
- சிறுவயதில் தொடங்குங்கள் காலத்துடன் வளர்ச்சி பெறுங்கள்
- கேள்விகள் கேட்கவும் - உங்களுக்கு விளங்கவில்லை என்றால் வாங்க வேண்டாம்
- உங்கள் எதிர்கால பாதுகாப்புக்கான முதல் படியை வைக்கவும்

# “உங்கள் வாழ்க்கை உங்களுக்கு முக்கியமானது என்றால்” அதை பாதுகாத்துக்கொள்ளவும்.

**Insurance is not just a policy it’s love, care, and responsibility**

**Start early secure your family, your dreams, your future**

**காப்புறுதி** - பொறுப்புணர்வுள்ள நிதித் திட்டமிடலின் அடித்தளம். இது உங்கள் குடும்பத்தின் மீதான அக்கறையின் உறுதிமொழியாகும்.

**இன்றே தொடங்குங்கள்** - உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை நிச்சயப்படுத்துங்கள், உங்கள் கனவுகளைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள், நிதி உறுதியை வழங்குங்கள்.

ஆயுள் காப்புறுதியின் நோக்கம் மரணத்தை எதிர்கொள்வதல்ல - உங்களுக்குப் பின்னர் உங்கள் அன்புக்குரியவர்கள் கண்ணியமாக வாழ்வதை உறுதிசெய்வதாகும்.

**You don’t buy life insurance because you are going to die but because those you love are going to live.**


Thank you!